Dinakaran

Page NO: 15 Date: 18.03.2023

புதுவை பல்கலையில்

# கடல்சார் பாதுகாப்பு சிறப்பு சொற்பொழிவு




புதுவை பல்கலைக்கழகத்தில் கடல்சார் பாதுகாப்பு குறித்த சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சியை துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்து பேசினார்.

புதுச்சேரி, மார்ச் 18:புதுவை பல்கலைக்கழகத்தின் யுஜிசி கடல்சார் ஆய்வு மையம், கடல்சார் பாதுகாப்புதுறைகளில் இளம் ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக 6 சிறப்புரை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. இவ் விரிவுரைகளில் பல்வேறு துறைகளை சேர்ந்த மாணவர்கள், பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கலந்துகொண்டனர். இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பு எதிர்கொள்ளும் அண்மைக்கால சவால்கள் மற்றும் அவற்றை கையாளும் வழிகளை முன்னிலைப்படுத்தும் நோக்கமாக இது இருந்தது. புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் தொடங்கிவைத்தார். யுஜிசி கடல்சார் ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் சுப்ரமணியம் ராஜு வரவேற்றார். சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகளின் புல முதல்வர் பி.பி.மொகந்தி நோக்க உரையாற்றினார்.

புதுடெல்லி தேசிய கடல்சார் அறக்கட்டளை இயக்குனர் ஜெனரல் வைஸ் அட்மிரல் பிரதீப் சவுகான் சிறப்புரையாற்றினார். கடல்சார் புவிசார் அரசியலில் உள்ள தொழில்நுட்பக் கருத்துகள் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. ஒவ்வொரு விரிவுரையிலும் கேள்வி பதில் அமர்வுகள் இருந்தன. இதில் பங்கேற்பாளர்களின் எல்லா கேள்விகளுக்கும் அட்மிரல் பிரதீப் சவுகான் பதிலளித்தார், கேள்விகளுக்கான பதில்களை மட்டும் வழங்காமல், மேலும் சிந்திக்கவும் தூண்டினார். தெற்காசிய ஆய்வுகள் மையத்தின் இணை பேராசிரியர் ஹுமாயூன் நன்றி கூறினார்.

THE HINDU

PAGE NO: 02 DATE: 18.03.23

Saturday, March 18, 2023
CHENNAI

# Last date extended

**The Hindu Bureau**
PUDUCHERRY

The last date for submission of online application for CUET(UG) - 2023 for the five-year integrated PG programmes offered at Pondicherry University has been extended to March 30.

Aspirants can apply at: https://cuet.samarth.ac.in/ or can submit applications till 9.50 p.m. on the revised last date, a press note from Pondicherry University said.